winmeen.com

# நான்காம் வார நடப்பு நிகழ்வுகள்

## டிசம்பர் 2020

டிசம்பர் 22-31

# நடப்பு நிகழ்வுகள்

**1.முழுக்க முழுக்க தனியார் நிறுவனங்களின் செயற்கைக்கோள்களை சுமந்துசெல்லும் ISRO'இன் முதல் ஏவுகலம் எது?**

அ. PSLV C31

ஆ. PSLV G7

**இ. PSLV C51 ☑**

ஈ. PSLV Mark II

❖ இந்திய விண்வெளி ஆய்வுமையமானது (ISRO) PSLV C51 ஏவுகலத்தில் தனியார் நிறுவனங்களின் செயற்கைக்கோள்களை விண்ணில் செலுத்தவுள்ளது. இதில், 'பிக்சல் இந்தியா' என்ற துளிர் நிறுவனத்–தால் முழுமையாக கட்டப்பட்ட புவி கண்காணிப்பு செயற்கைக்கோள், 'ANAND', 'ஸ்பேஸ் கிட்ஸ் இந்தியா' என்ற துளிர் நிறுவனத்தின், 'சதீஷ் சாட்', பல்கலைக்கழகங்களின் கூட்டமைப்பால் கட்டப்பட்ட 'யுனிட்–சாட்' ஆகிய இரண்டு செயற்கைக்கோள்களும் அடங்கும்.

**2.அண்மைச்செய்திகளில் இடம்பெற்ற, 'பெங்களூரு மிஷன் 2022' என்பதுடன் தொடர்புடையது எது?**

அ. நலவாழ்வு

**ஆ. உட்கட்டமைப்பு ☑**

இ. விளையாட்டு

ஈ. காலநிலை மாற்றம்



❖ விடுதலை அடைந்து 75 ஆண்டுகள் நிறைவடைவதை குறிக்கும் வகையில் அடுத்த ஈராண்டுகளில் பெங்களூரு நகரத்தின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காக கர்நாடக முதலமைச்சர் B S எடியூரப்பா, 'பெங்களூரு மிஷன் 2022'ஐ தொடங்கியுள்ளார். பெங்களூரு நகரத்துக்கான உட்கட்டமைப்பு புனரமைப்பில் கவனம் செலுத்தும் பகுதிகள் விரைவான பயணம், பசுமை நகரம், சேவைகளுக்கான அணுகல் மற்றும் கலாச்சாரம் மற்றும் பாரம்பரியத்தை வழங்கும். மின்சார வாகனங்கள், புறநகர் ரயில், மரப்பூங்காக்களுக்கான வசதிகளும் அதில் திட்டமிடப்பட்டுள்ளன.


**3.பாலியல் வன்புணர்வில் ஈடுபடுவோருக்கு வேதியியல் முறையில் ஆண்மை நீக்கம் செய்வதற்கான சட்டத்திற்கு ஒப்புதல் அளித்துள்ள நாடு எது?**

அ. சீனா

ஆ. ஐக்கிய அரபு அமீரகம்

இ. இலங்கை

**ஈ. பாகிஸ்தான் ☑**



❖ பாலியல் வன்புணர்வில் ஈடுபடுவோருக்கு வேதியியல் முறையில் ஆண்மை நீக்கம் செய்வதற்கான சட்டத்திற்கு பாகிஸ்தான் அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இந்தப்புதிய சட்டமானது முதல்முறை குற்றத்தில்

ஈடுபடுவோருக்கும் ஏற்கனவே குற்றத்தில் ஈடுபட்டோருக்கும் பொருந்தும். இந்த விதிமுறை பாலியல் வன்புணர்வு தடுப்பு அவசர ஆணை – 2020'இல் சேர்க்கப்பட்டுள்ளது.

❖ இந்த அவசர ஆணையின்படி, வேதியியல் முறையில் ஆண்மை நீக்கம் செய்வதற்கு உத்தரவிடுவது என்பது அவ்வழக்கை விசாரிக்கும் விசாரணை நீதிபதியின் சொந்த விருப்பமாகும்.


**4. உழவர்களின் வெற்றிக்கதைகளை எடுத்துரைத்து, அரசு வெளியிட்டுள்ள மின்–நூலின் பெயரென்ன?**

அ. Farmer's Friend

**ஆ. Putting Farmer First ☑**

இ. Height of Farmers

ஈ. Mera Kisan




❖ 'உழவர்களை முதலிடத்தில் வைப்பது' என்ற மின் நூலை நடுவணரசு வெளியிட்டுள்ளது. 3 வேளாண் சட்டங்கள் / சீர்திருத்தங்கள் இயற்றப்பட்ட பின்னர், ஒப்பந்த விவசாயத்தால் பயனடைந்த உழவர்களின் வெற்றிக்கதைகளை சித்தரிக்கும் 106 பக்க நூல் இது. ஹிந்தி மொழியிலும் ஆங்கிலத்திலும் இந்த நூல் வெளியிடப்பட்டுள்ளது.

**5.ஆண்டுதோறும் பன்னாட்டு புலம்பெயர்ந்தோர் நாள் அனுசரிக்கப்படுகிற தேதி எது?**

**அ. டிசம்பர் 18 ☑**

ஆ. டிசம்பர் 19

இ. டிசம்பர் 20

ஈ. டிசம்பர் 21



❖ ஆண்டுதோறும் டிச.18ஆம் தேதியை ஐக்கிய நாடுகள் அவை, பன்னாட்டு புலம்பெயர்ந்தோர் நாளாகக் கொண்டாடுகிறது. உலகெங்கும் பேரளவில் அதிகரித்துவரும் புலம்பெயர்ந்தோரின் எண்ணிக்கையை கருத்தில்கொண்டு, 2000ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகளின் பொதுச்சபை இந்த முடிவை எடுத்தது. "Reimagining Human Mobility" என்பது நடப்பாண்டில் (2020) வரும் இந்நாளுக்கான கருப்பொருளாகும்.

**6. ஆண்டுதோறும் பன்னாட்டு மனித ஒற்றுமை நாள் அனுசரிக்கப்படுகிற தேதி எது?**

அ. டிசம்பர் 18

ஆ. டிசம்பர் 19

**இ. டிசம்பர் 20 ☑**

ஈ. டிசம்பர் 21



❖ ஒற்றுமையின் முக்கியத்துவம் குறித்து பொதுமக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக பன்னாட்டு மனித ஒற்றுமை நாள் (International Human Solidarity Day) ஆண்டுதோறும் டிச.20 அன்று கடைபிடிக்கப்படுகிறது.

❖ இந்த நாள், பன்முகத்தன்மையில் ஒற்றுமையைக் கொண்டாடுவதையும், வறுமை ஒழிப்புப்பணியில் ஒற்றுமையின் முக்கியத்துவத்தை மக்களுக்கு நினைவூட்டுவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது. வறுமை ஒழிப்பு உள்ளிட்ட நீடித்த வளர்ச்சி இலக்குகளை அடைவதற்கு ஒற்றுமையை ஊக்குவிப்பதற் –கான வழிகள் குறித்த விவாதத்தை ஊக்குவிக்கும் நாளாகும் இது.

**7.நடப்பாண்டுக்கான (2020) எளிதாக தொழில்புரிவது குறித்த உலக வங்கியின் சமீபத்திய அறிக்கையில் இந்தியாவின் தரநிலை என்ன?**

அ. 85

ஆ. 72

**இ. 63 ☑**

ஈ. 56




❖ நடப்பாண்டுக்கான (2020) எளிதாக தொழில்புரிவது குறித்த உலகவங்கியின் சமீபத்திய அறிக்கையின் படி, 190 நாடுகளில் இந்தியா 63ஆவது இடத்தில் உள்ளது. இந்த அறிக்கையின்படி, உலக வங்கியானது தொடர்ச்சியாக மூன்றாவது ஆண்டாக இந்தியாவை முன்னேறி வரும் முதல் பத்து நாடுகளுள் ஒன்றாக அங்கீகரித்துள்ளது. நொடித்துமீள்வதன்கீழ், இந்தியாவின் மீட்பு விகிதம் 26.5%–71.6% வரை கணிசமாக முன்னேறியுள்ளது.

❖ நொடிப்பிலிருந்து மீள்வதற்கான காலம் 4.3 ஆண்டுகளில் இருந்து 1.6 ஆண்டுகளாகக் குறைந்துள்ளது. கட்டுமான அனுமதிவழங்குவதற்கான நடைமுறைகளின் எண்ணிக்கையை இந்தியா பெருமளவு குறைத்துள்ளது. இதுதவிர, தெற்காசிய நாடுகளில் இந்தியா தனது முதலிடத்தைத் தக்கவைத்துள்ளது.

**8.ஆயுதப்படைகளிடம் ஒப்படைக்கப்பட்ட ASTRA Mk–I ஏவுகணை, IMSAS மற்றும் BOSS அமைப்பு ஆகியவை கீழ்க்காணும் எந்த அமைப்பால் உருவாக்கப்பட்டவையாகும்?**

**அ. DRDO ☑**

ஆ. OFB

இ. BHEL

ஈ. HAL

❖ இராணுவ ஆராய்ச்சி மேம்பாட்டு மையம் (DRDO) தயாரித்த 3 கருவிகளை, முப்படைத்தளபதிகளிடம், பாதுகாப்புத்துறை அமைச்சர் இராஜ்நாத் சிங் வழங்கினார். இதில், இந்திய கடல்சார் கண்காணிப்புக் கருவியை (IMSAS) கடற்படைத்தளபதி கரம்பீர் சிங்கிடமும், ASTRA Mk–I இரக ஏவுகணையை வான் படைத்தளபதி இராகேஷ் குமார் சிங் பதாரியாவிடமும், எல்லைக் கண்காணிப்புக் கருவியை (BOSS), தரைப்படைத்தளபதி MM நரவானேவிடமும் பாதுகாப்புத்துறை அமைச்சர் இராஜ்நாத் சிங் வழங்கினார்.

**9. UNESCO கலாச்சார பாரம்பரிய பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ள, 'கூஸ்கூஸ்' என்பது கீழ்க்காணும் எந்தப் பிராந்தியத்தின் முதன்மை உணவாகும்?**



அ. ஆஸ்திரேலியா

**ஆ. வட ஆப்பிரிக்கா ☑**

இ. வட அமெரிக்கா

ஈ. தெற்காசியா

❖ வட ஆப்பிரிக்க பிராந்தியத்தின் 'கூஸ்கூஸ்' என்ற முதன்மை உணவானது, UNESCO'இன் தொட்டுணர முடியாத பாரம்பரியங்களின் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளது. அல்ஜீரியா மற்றும் மொராக்கோ, துனிசியா மற்றும் மூரித்தானியா ஆகிய நாடுகள், UNESCO பட்டியலில் இந்த உணவைச் சேர்ப்பதற்காக, 2019 மார்ச்சில் தங்களது மனுவைச் சமர்ப்பித்திருந்தன. 'கூஸ்கூஸ்' என்பது வட ஆப்பிரிக்க பிராந்தியத்தில், செக்ஸூ, குஸ்க்ஸி மற்றும் கெக்ஸூ என்றும் அழைக்கப்படுகிறது.

**10.மாநில திட்டங்கள்பற்றிய அனைத்து தகவல்களையும் ஒருங்கிணைப்பதற்காக பொதுநலத்திட்டங்கள் வலைத்தளம் அல்லது ஜன் கல்யாண் வலைத்தளம் என்றவொன்றை தொடங்கியுள்ள மாநிலம் எது?**

அ. குஜராத்

**ஆ. இராஜஸ்தான் ☑**

இ. பஞ்சாப்

ஈ. மத்திய பிரதேசம்

❖ இராஜஸ்தான் மாநில முதலமைச்சர் அசோக் கெலாட், முதலீட்டாளர்களுக்குத் தேவையான நூற்றுக்கும் மேற்பட்ட வகையான அனுமதிகளையும் சேவைகளையும் கிடைக்கச் செய்வதற்காக 'ஒன் ஸ்டாப் ஷாப்' வசதியை அறிமுகப்படுத்தியுள்ளார். தகுதி, மாநில திட்டங்களின் பயன்கள், பயனுள்ள சுற்றறிக்கைகள் மற்றும் ஆணைகள்போன்ற தகவல்களை ஒருங்கிணைப்பதற்காக பொதுநலத்திட்டங்கள் வலைத்தளம் அல்லது ஜன் கல்யாண் வலைத்தளம் என்றவொன்றையும் முதலமைச்சர் தொடங்கியுள்ளார். இந்த வலைத்தளம், கடந்த ஈராண்டுகளில் அம்மாநில அரசு மேற்கொண்ட முயற்சிகளை எடுத்துக்காட்டுகிறது.

---

# நடப்பு நிகழ்வுகள்

**1.பண்டித தீனதயாள் உபாத்யாய தொலைத்தொடர்பு சிறப்பு விருதுகளை வழங்குகிற மத்திய அமைச்சகம் எது?**

அ. திறன்மேம்பாட்டு அமைச்சகம்

ஆ. எரிசக்தி அமைச்சு

**இ. தகவல்தொடர்பு அமைச்சகம் ☑**

ஈ. மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகம்



❖ தொலைத்தொடர்புத்துறையும் மத்திய தகவல்தொடர்பு அமைச்சகமும் இணைந்து பண்டித தீனதயாள் உபாத்யாய தொலைத்தொடர்புத்திறன் மேம்பாட்டு விருதுகளை வழங்குகின்றது. தொலைத்தொடர்புத் துறையில் திறன்மேம்பாட்டை ஊக்குவிக்கும் நோக்கத்துடன், தொலைத்தொடர்புத்துறை கடந்த 2017ஆம் ஆண்டு இந்த விருதை அறிமுகப்படுத்தியது. வேளாண்மை, வர்த்தகம், நலவாழ்வு, கல்வி உள்ளிட்ட பல்வேறு பிரிவுகளில் தொலைத்தொடர்புமூலம் தீர்வுகளை உருவாக்குவோருக்கு இந்த விருதுகள் வழ–ங்கப்படுகின்றன. நடப்பாண்டின் விருதுகள் சமீபத்தில் தகவல் தொடர்பு அமைச்சரால் வழங்கப்பட்டன.


**2.அண்மையில் வெளியிடப்பட்ட, 'ரிப்போர்டிங் இந்தியா' என்ற நூலின் ஆசிரியர் யார்?**

அ. S ஜெய்சங்கர்

**ஆ. பிரேம் பிரகாஷ் ☑**

இ. சுஷாந்த் சரீன்

ஈ. ஷீலா பட்




❖ மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் S ஜெய்சங்கர், சமீபத்தில், தில்லியில், 'Reporting India' என்னும் நூலை வெளியிட்டார். இது, விடுதலைக்குப் பின்னரான இந்தியாவின் வரலாற்றை விவரிக்கிறது. முன்னணி செய்தி நிறுவனமான ஆசிய நியூஸ் இன்டர்நேஷனலின் (ANI) தலைவர் பிரேம் பிரகாஷ் இந்நூலை எழுதியுள்ளார். அவர், 1971ஆம் ஆண்டில் இந்நிறுவனத்தை நிறுவினார். மேலும், காணொளி வழிச்செய்திகளை ஒருங்கிணைக்கும் இந்தியாவின் முதல் நிறுவனம் இதுவாகும்.


**3. கீழ்க்காணும் யாருக்கு, 'ASSOCHAM Enterprise of the Century' விருது வழங்கப்பட்டுள்ளது?**

அ. ஆதி கோத்ரேஜ்

ஆ. முகேஷ் அம்பானி

**இ. ரத்தன் டாடா ☑**

ஈ. உதய் கோட்டக்




❖ பிரதமர் நரேந்திர மோடி ASSOCHAM அறக்கட்டளை வாரம்–2020'இல் காணொளிவழி மாநாட்டின் மூலம் சிறப்புரையாற்றினார். இந்நிகழ்வின்போது, டாடா குழுமத்தின் சார்பாக விருதைப் பெற்ற ரத்தன் டாடாவுக்கு, 'ASSOCHAM Enterprise of the Century' விருதினை பிரதமர் வழங்கினார். ரத்தன் டாடா

அவர்கள், டாடா சன்ஸ் மற்றும் டாடா குழுமத்தின் தலைவராக பணியாற்றியுள்ளார். அவர் இப்போது, அக்குழுமத்தின் பல்வேறு தொண்டு அறக்கட்டளைகளுக்கு தலைமைதாங்கிவருகிறார்.

**4. IUCN'இன் அண்மைய மதிப்பீட்டின்படி, இந்திய EEZ'இல் உள்ள கீழ்க்காணும் எவ்வினங்கள் மிகவும் அருக்கிவிட்ட இனங்களாக வகைப்படுத்தப்பட்டுள்ளன?**

**அ. சுறாக்கள், திருக்கைகள் மற்றும் கலப்புச்சுறாக்கள் ☑**



ஆ. கானமயில்கள்

இ. வெளிமான்கள்

ஈ. கருப்போட்டு ஆமைகள் மற்றும் இமயமலை வரையாடுகள்

❖ இயற்கை பாதுகாப்புக்கான பன்னாட்டு ஒன்றியத்தின் (IUCN) சுறா வல்லுநர்கள் குழு, இந்திய பிரத்யேக பொருளாதார மண்டலத்தில் (EZZ) சுறாக்கள் (Shark), திருக்கைகள் (Sting Ray) மற்றும் கலப்புச்சுறாக்கள் (Chimaera) பற்றிய மதிப்பீட்டை நடத்தியது. அம்மதிப்பீட்டின்படி, இந்தியப்பெருங்கடல்களில் காணப்படும் 170 இனங்களுள் 19 இனங்கள் (அதாவது 11%) மிகவும் அருக்கிவிட்ட இனங்களாக வகைப்படுத்தப்பட்டு உள்ளன. மேலும் அவை அழிந்துபோகும் நிலையில் உள்ளன.

**5. 20% எத்தனாலும் 80% பெட்ரோலுங்கொண்ட ஆட்டோமொபைல் எரிபொருளின் பெயரென்ன?**

அ. வானூர்தி விசையாழி எரிபொருள்




ஆ. பெட்ரோல்

இ. உயிரி – பெட்ரோல்

**ஈ. E20 எரிபொருள் ☑**

❖ இந்திய வாகனங்களில் E20 எரிபொருளை பயன்படுத்தும் திட்டத்தை இந்திய அரசாங்கம் சமீபத்தில் முன்மொழிந்தது. E20 எரிபொருள் என்பது 20% எத்தனாலும் 80% பெட்ரோலுங்கொண்ட ஒரு கலவை ஆகும். இந்நடவடிக்கை வாகன உமிழ்வைக் குறைப்பதை நோக்கமாகக் கொண்ட அதே வேளையில் நாட்டின் கச்சா எண்ணெய் இறக்குமதி செலவைக் குறைப்பதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

**6.அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற, "ஷிங்கன்சென்" என்றால் என்ன?**

அ. பௌத்த நினைவுச்சின்னம்



**ஆ. அதிவேக இரயில் ☑**

இ. COVID தடுப்பூசி

ஈ. புதிய கோள்

❖ அண்மையில், இந்தியாவில் உள்ள ஜப்பான் தூதரகம், ஜப்பானில் பயன்படுத்தப்படும் E5 வரிசையைச் சார்ந்த ஷிங்கன்சென் – அதிவேக புல்லட் இரயில்களின் சில படங்களை வெளியிட்டுள்ளது. அது, மும்பை–ஆமதாபாத் அதிவேக ரயில் திட்டத்தில் பயன்படுத்துவதற்கு ஏற்றவாறு மாற்றப்படும். இத்திட்டம் முடிந்ததும், மும்பை–ஆமதாபாத் இடையேயான பயண நேரம் 2 மணிநேரமாகக் குறையும். இந்தத் திட்டம், 2023ஆம் ஆண்டுக்குள் நிறைவடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**7. அண்மையில், நொய்டா பன்னாட்டு வானூர்தி நிலையத்தின் புதிய சின்னமாக ஏற்றுக்கொள்ளப்பட்ட உத்தரபிரதேச மாநிலத்தின் மாநிலப்பறவை எது?**

அ. குருவி

ஆ. சிறு வல்லூறு

**இ. சாரசு கொக்கு ☑**

ஈ. மயில்



❖ உத்தரபிரதேச மாநிலத்தின் ஜேவரில் கட்டப்பட்டுவரும் புதிய கிரீன் பீல்டு வானூர்தி நிலையத்திற்கு நொய்டா பன்னாட்டு வானூர்தி நிலையம் எனப் பெயரிடப்பட்டுள்ளது. இந்த வானூர்தி நிலையத்தின் புதிய இலச்சினையில் ஒரு சாரசு கொக்கு இடம்பெற்றுள்ளது. அப்பறவை உத்தரபிரதேச மாநிலப்பறவை ஆகும். இவ்வானூர்தி நிலையத்தை நிர்மாணிப்பதற்கான ஒப்பந்தம் சூரிச் வானூர்தி நிலைய நிறுவன –த்துக்கு வழங்கப்பட்டுள்ளது. இவ்வானூர்தி நிலையத்தின் முதற்கட்டம் 2024'க்குள் செயல்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**8.தேசிய உழவர் நாள் கொண்டாடப்படுகிற தேதி எது?**

அ. டிசம்பர் 21

ஆ. டிசம்பர் 22

**இ. டிசம்பர் 23 ☑**

ஈ. டிசம்பர் 24



❖ இந்தியாவின் சமூக–பொருளாதார வளர்ச்சியில் உழவர்களின் பங்கை அங்கீகரிக்கவும், ஐந்தாம் பிரதமர் சௌத்ரி சரண் சிங்கின் பிறந்தநாளைக் குறிக்கவுமாக ஒவ்வோர் ஆண்டும் டிசம்பர்.23 அன்று தேசிய உழவர்கள் நாள் இந்தியாவில் கொண்டாடப்படுகிறது. இந்திய நாட்டில், உழவர்களின் நலஞ்சார்ந்து அவர் ஆட்சி புரிந்தமைக்காக, 'இந்திய உழவர்களின் சாம்பியன்' என அவர் அறியப்படுகிறார். 'கிசான் திவாஸ்' எனவும் இந்நாள் அறியப்படுகிறது.

**9.உழவர்களுக்காக, 'Farmer Registration and Unified Beneficiary Information System (FRUITS)' என்ற வலைத்தளத்தை தொடங்கியுள்ள மாநில அரசு எது?**

அ. மத்திய பிரதேசம்

ஆ. உத்தர பிரதேசம்

இ. ஹிமாச்சல பிரதேசம்

**ஈ. கர்நாடகா ☑**

❖ உழவர்களுக்கான மின்னாளுகை வலைத்தளமான 'உழவர் பதிவு மற்றும் ஒருங்கிணைந்த பயனாளி தகவலமைப்பை (FRUITS) கர்நாடக மாநில அரசு தொடங்கிவைத்துள்ளது. இது, மாநிலத்தின் அனைத்து உழவர்களின் வேளாண் நிலங்கள் மற்றும் வேளாண் கடன்களின் அனைத்து விவரங்களின் ஒற்றை களஞ்சியத்தை உருவாக்குவதை நோக்கமாகக்கொண்டுள்ளது.

- உழவர்களுக்கு அந்த வலைத்தளத்தில் அடையாள எண் ஒன்று வழங்கப்படும். இந்த அடையாள எண்ணைக்கொண்டு கடன் வழங்கும் எந்த வங்கிகளும் கடன் வழங்குதற்கு முன்னர் உழவர்களின் விவரங்களை அணுகிக்கொள்ளலாம். கனரா வங்கியானது இந்த FRUITS வலைத்தளத்தை சோதனை அடிப்படையில் இயக்கவுள்ளது.

**10.நேதாஜி சுபாஸ் சந்திரபோஸின் 125ஆவது பிறந்தநாளை நினைவுகூரும் குழுவானது கீழ்க்காணும் எந்த அமைச்சரின்கீழ் அமைக்கப்படவுள்ளது?**



அ. இராஜ்நாத் சிங்

**ஆ. அமித் ஷா ☑**

இ. S ஜெய்சங்கர்

ஈ. பியூஷ் கோயல்

- நேதாஜி சுபாஷ் சந்திரபோஸின் 125ஆவது பிறந்தநாளை கொண்டாடுவதற்காக மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா தலைமையில் உயர்மட்டக்குழு ஒன்றை அமைக்க அரசு முடிவெடுத்துள்ளது. 2021 ஜன.23'இலிருந்து ஓராண்டுக்கு நடைபெறவுள்ள நிகழ்வுகள்குறித்து இக்குழு முடிவுசெய்யும்.
- விடுதலை போராட்டத்திற்கு நேதாஜி அளித்த மாபெரும் பங்களிப்புக்கு நன்றி செலுத்தும் விதமாக இந்த நிகழ்ச்சிகள் நடத்தப்படவுள்ளன. நிபுணர்கள், வரலாற்றுவியலாளர்கள், எழுத்தாளர்கள், நேதாஜி சுபாஷ் சந்திர போஸின் குடும்ப உறுப்பினர்கள், இந்திய தேசிய இராணுவத்துடன் தொடர்புடைய முக்கிய நபர்கள் ஆகியோர் அரசு அமைக்கவுள்ள உயர்மட்டக்குழுவில் இடம்பெற்றிருப்பார்கள்.

# நடப்பு நிகழ்வுகள்


**1. Dr FC கோலி சிறப்பு ஆராய்ச்சி மையத்தை அமைக்கவுள்ள இந்திய ஆராய்ச்சி நிறுவனம் எது?**

**அ. சென்னை கணித நிறுவனம் ☑**

ஆ. TATA அடிப்படை ஆராய்ச்சி நிறுவனம்

இ. இந்திய புள்ளிவிவரங்கள் நிறுவனம்

ஈ. இந்திய அறிவியல் நிறுவனம்



❖ கடந்த 1989ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட சென்னை கணித நிறுவனம் என்பது ஒரு முதன்மை ஆராய்ச்சி மற்றும் கல்வி நிறுவனமாகும். இதற்கு, 2006'இல், 'பல்கலைக்கழக' அந்தஸ்து வழங்கப்பட்டது. கணிதம் மற்றும் கணினி அறிவியலில் மேம்பட்ட ஆராய்ச்சிக்கான Dr FC கோலி சிறப்பு ஆராய்ச்சி மையத்தை இந் நிறுவனம் அமைக்கவுள்ளது. Dr பாகிர் சந்த் கோலி என்பவர் டாடா கன்சல்டன்சி சர்வீசஸின் நிறுவனர் மற்றும் முதல் தலைமைச் செயல் அதிகாரி ஆவார். மேலும், 'இந்திய தகவல் தொழில்நுட்பத் துறையின் தந்தை' என இவர் கருதப்படுகிறார்.

**2.தனிப்பயனாக்கப்பட்ட வங்கிச்சேவைகளை வழங்குவதற்காக பாதுகாப்புப்படைகளுடன் கூட்டிணைந் –துள்ள இந்திய வங்கி எது?**

அ. பாரத வங்கி

**ஆ. பரோடா வங்கி ☑**

இ. பஞ்சாப் தேசிய வங்கி

ஈ. கனரா வங்கி

❖ இந்தியக்கடற்படை மற்றும் இந்தியக்கடலோரக்காவல்படையுடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் பரோடா வங்கி கையெழுத்திட்டுள்ளது. இப்புரிந்துணர்வு ஒப்பந்தத்தின்கீழ், கணக்கு வைத்திருப்பவர்களுக்கு பல்வேறு வசதிகளுடன் தனிப்பயனாக்கப்பட்ட சேவைகளை அவ்வங்கி வழங்கவுள்ளது. 'பரோடா ராணுவ ஊதிய தொகுப்பு'மூலம் தனிப்பயனாக்கப்பட்ட வங்கிச்சேவைகளை வழங்குவதற்காக இந்திய இராணுவத்துடனான தனது புரிந்துணர்வு ஒப்பந்தத்தை பரோடா வங்கி புதுப்பித்துள்ளது.

**3.நலவாழ்வு & மருத்துவத்தில் ஒத்துழைப்பு நல்குதற்கும், 'பசுமை நலவாழ்வு'க்கு ஆதரவளிப்பதற்குமாக, இந்தியா, கீழ்க்காணும் எந்த நாட்டுடனான ஓர் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது?**

அ. பிரான்ஸ்

ஆ. பிரேசில்

இ. இத்தாலி

**ஈ. இஸ்ரேல் ☑**



❖ கடந்த 2003 செப்டம்பரில் கையெழுத்திடப்பட்ட பழைய ஒப்பந்தத்தை மாற்றியமைத்து, இந்தியாவும் இஸ்ரேலும் அண்மையில் நலவாழ்வு மற்றும் மருத்துவத் துறைகளில் ஒத்துழைப்பு நல்குவதற்கான ஓர் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளன.

❖ இருநாடுகளும், காலநிலை நெகிழ்திறனுடன் கூடிய உட்கட்டமைப்பை உருவாக்குவதில் தங்களின் நிபுணத்துவத்தைப் பகிர்ந்துகொள்ளவும், 'பசுமை சுகாதாரத்திற்கு' ஆதரவளிக்கவும் ஒப்புக்கொண்டன.

**4. இந்தியப்பிரதமர் நரேந்திர மோடிக்கு, 'லெஜியன் ஆப் மெரிட்' விருதை வழங்கிய நாடு எது?**

அ. இரஷ்யா

**ஆ. ஐக்கிய அமெரிக்க நாடுகள் ☑**

இ. ஐக்கியப் பேரரசு

ஈ. ஐக்கிய அரபு அமீரகம்



❖ ஐக்கிய அமெரிக்க நாடுகளின் (US) 'லெஜியன் ஆப் மெரிட்' விருது இந்தியப்பிரதமர் நரேந்திர மோடிக்கு வழங்கப்பட்டுள்ளது. இந்த மதிப்புமிக்க விருது, ஜப்பானிய முன்னாள் பிரதமர் ஷின்சோ அபே மற்றும் ஆஸ்திரேலிய பிரதமர் ஸ்காட் மோரிசன் ஆகியோருக்கும் வழங்கப்பட்டுள்ளது. இந்திய–அமெரிக்கக் கூட்டணி தொடர்பாக இருநாடுகளில் நிலவும் ஒருமித்த கருத்தைப் பிரதிபலிக்கும் வகையில் இருதரப்பு நல்லுறவை மேம்படுத்துவதற்காக இந்திய மற்றும் ஐக்கிய அமெரிக்க நாடுகளின் மக்கள் மேற்கொண்ட நடவடிக்கைகளை இந்த விருது அங்கீகரிக்கிறது.

**5.தேசிய நுகர்வோர் நாள் (National Consumers Day) கடைபிடிக்கப்படும் தேதி எது?**

அ. டிசம்பர் 22

ஆ. டிசம்பர் 23

**இ. டிசம்பர் 24 ☑**

ஈ. டிசம்பர் 25



❖ நுகர்வோர் இயக்கத்தின் முக்கியத்துவத்தையும், ஒவ்வொரு நுகர்வோரும் தங்களின் உரிமைகள் மற்றும் பொறுப்புகள்குறித்து மேலும் அறிந்துகொள்ளவேண்டிய அவசியத்தையும் வலியுறுத்தும் விதமாக ஒவ்வோர் ஆண்டும் டிச.24 அன்று இந்தியாவில் தேசிய நுகர்வோர் நாள் கொண்டாடப்படுகிறது. "The Sustainable Consumer" என்பது நடப்பாண்டில் (2020) வரும் இந்த நாளுக்கான கருப்பொருளாகும். 1986ஆம் ஆண்டு இதேநாளில், நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் இயற்றப்பட்டது.

**6. "தேசிய நல்லாட்சி நாள்" அனுசரிக்கப்படுகிற தேதி எது?**

அ. டிசம்பர் 22

ஆ. டிசம்பர் 23

இ. டிசம்பர் 24

**ஈ. டிசம்பர் 25 ☑**



❖ ஆண்டுதோறும் டிசம்பர்.25 அன்று, "நல்லாட்சி நாள்" அனுசரிக்கப்படுகிறது. இந்தியாவின் முன்னாள் பிரதமரான அடல் பிகாரி வாஜ்பாயை கௌரவிக்கும் பொருட்டு, கடந்த 2014ஆம் ஆண்டில் இச்சிறப்புநாள் உருவாக்கப்பட்டது. அரசின் பொறுப்பு மற்றும் நிர்வாகம்குறித்து குடிமக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துவதே இந்தச் சிறப்புநாளின் நோக்கமாகும்.

**7.இந்திய மானுடவியல் ஆய்வுமையமானது (AnSI) எந்த மத்திய அமைச்சகத்தின்கீழ் செயல்படுகிறது?**

அ. சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் அமைச்சகம்

ஆ. அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அமைச்சகம்

இ. பழங்குடியினர் நலத்துறை அமைச்சகம்

**ஈ. கலாச்சார அமைச்சகம் ☑**

❖ இந்திய மானுடவியல் ஆய்வகம் என்பது இந்திய அரசின் கலாச்சார அமைச்சகத்தின்கீழ் செயல்படும் ஓர் அமைப்பாகும். இதன் தலைமையகம் கொல்கத்தாவில் அமைந்துள்ளது. இது மனித மற்றும் பண்பாட்டுக் கூறுகளுக்கான மானுடவியல் ஆய்வு மற்றும் கள தரவு ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ளது. வட சென்டினல் தீவுகளில் எந்தவொரு வணிக நடவடிக்கையும் பழங்குடியினருக்கு அச்சுறுத்தலாக இருக்கும் என்று அண்மையில் ஒரு கொள்கை ஆவணத்தின்மூலமாக இந்திய மானுடவியல் ஆய்வகம் எச்சரித்துள்ளது.

**8.அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற, 'ஐந்நூறு மீட்டர் துளையுள்ள கோள தொலைநோக்கி (FAST)' அமைந்துள்ள நாடு எது?**



அ. அர்ஜென்டினா


ஆ. பிரான்ஸ்

**இ. சீனா ☑**

ஈ. இரஷ்யா

❖ புவேர்ட்டோ ரிக்கோவில் அமைந்திருந்த வரலாற்றுச் சிறப்புமிக்க அரேசிபோ ஆய்வகம் நிலைகுலைந்த பின்னர், சீனா உலகின் மிகப்பெரிய வானொலி தொலைநோக்கியை பன்னாட்டு அறிவியலாளர்களின் பயன்பாட்டுக்காக திறந்துள்ளது. Five–hundred–meter Aperture Spherical Telescope (FAST) சீனாவின் குய்ஷோ மாகாணத்தில் அமைந்துள்ளது. இந்த 'FAST' தொலைநோக்கியின் கட்டுமானம், 2016ஆம் ஆண்டில் நிறைவடைந்தது. தற்போது, உலகெங்கிலும் உள்ள வானியலாளர்களின் பயன்பாட்டுக்காக இந்தத் தொலைநோக்கி திறக்கப்பட்டுள்ளது.

**9.அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற, 'தௌ பூட்ஸ்' என்றால் என்ன?**



அ. COVID தடுப்பூசி

ஆ. கொரோனா வைரஸ் திரிபு

**இ. விண்மீன் அமைப்பு ☑**

ஈ. அதிவேக புல்லட் இரயில்

❖ பன்னாட்டு அறிவியலாளர்கள் குழுமமானது சமீபத்தில் நமது சூரிய மண்டலத்திற்கு அப்பாற்பட்ட ஒரு கோளிலிருந்து முதல் வானொலி சமிக்ஞையை சேகரித்துள்ளது. சுமார் 51 ஒளியாண்டு தொலைவில் உள்ள இந்தப் புறக்கோள், 'தௌ பூட்ஸ்' விண்மீன் அமைப்பில் காணப்படுகின்றது. நெதர்லாந்தில் உள்ள வானொலி தொலைநோக்கியான தாழ் அதிர்வெண் வரிசையைப்பயன்படுத்தி (LOFAR) இவ்வானொலி சமிக்ஞை சேகரிக்கப்பட்டுள்ளது.

**10. நடப்பாண்டு (2020) இந்திய பன்னாட்டு அறிவியல் விழாவுக்கான கருப்பொருள் என்ன?**

அ. Science for Self-Reliant India and Global Welfare ☑

ஆ. Aatma Nirbhar Vigyanika

இ. Science and COVID-19

ஈ. Bharat Vigyan

❖ அறிவியல் மற்றும் தொழில்நுட்பம் மற்றும் புவி அறிவியல் ஆகிய அமைச்சகங்கள் விஞ்ஞான பாரதியுடன் இணைந்து இந்திய பன்னாட்டு அறிவியல் விழாவை நடத்துகின்றன. கடந்த 2015ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட இந்தத் திருவிழா, சமுதாயத்தில் அறிவியல் மனப்பான்மையை மேம்படுத்துவதையும், அறிவியல்சார் தொழிற்முறை வாழ்வை மேற்கொள்ள மாணவர்களை ஊக்குவிப்பதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது. நடப்பாண்டில் நான்கு நாள் நடத்தப்பட்ட இந்தத் திருவிழாவின் கருப்பொருள், "Science for Self–Reliant India and Global Welfare" என்பதாகும்.

---

## நடப்பு நிகழ்வுகள்

**1.எந்தப்பல்கலைக்கழகத்தின் நூற்றாண்டு விழாவின்போது பிரதமர் அஞ்சல்தலையை வெளியிட்டார்?**

**அ. அலிகார் முஸ்லிம் பல்கலைக்கழகம் ☑**

ஆ. ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகம்

இ. தில்லி பல்கலைக்கழகம்

ஈ. பனாரஸ் இந்து பல்கலைக்கழகம்

❖ அலிகார் முஸ்லிம் பல்கலைக்கழகம் (AMU) என்பது அலிகாரில் உள்ள ஒரு நடுவண் பல்கலைக்கழகம் ஆகும். இது முதலில், சர் சையத் அகமத் கான் அவர்களால் 1875'இல் நிறுவப்பட்டது. அலிகார் முஸ்லிம் பல்கலைக்கழக சட்டத்திற்குப்பிறகு, 'முகமது ஆங்கிலோ–ஓரியண்டல் கல்லூரி' என்ற அதன் அசல்பெயர் 1920'இல் அலிகார் முஸ்லிம் பல்கலைக்கழகம் என மாற்றப்பட்டது. அண்மையில் பிரதமர் மோடி, இந்தப் பல்கலைக்கழகத்தின் நூற்றாண்டு விழா கொண்டாட்டங்களில் பங்கேற்று அலிகார் முஸ்லிம் பல்கலை –க்கழகத்துக்கான ஒரு சிறப்பு அஞ்சல் தலையையும் வெளியிட்டார்.

**2.லான்செட் அறிக்கையின்படி, இந்தியாவில் நிகழ்ந்த 1.7 மில்லியன் இறப்புகளுக்கும் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் ஏற்பட்ட 1.4% பொருளாதார இழப்புக்கும் காரணமானது எது?**

அ. COVID-19

**ஆ. காற்று மாசுபாடு ☑**

இ. பரவா நோய்கள்

ஈ. புகைத்தல்



❖ லான்செட் இதழில் வெளியிடப்பட்ட, 'இந்திய மாநிலங்களில் சுகாதாரம் மற்றும் பொருளாதாரத்தில் காற்று மாசு ஏற்படுத்திய தாக்கம்' குறித்த அண்மைய ஆய்வின்படி, இந்தியாவில், 2019ஆம் ஆண்டில் காற்று மாசுபாடு காரணமாக 1.7 மில்லியன் இறப்புகள் நிகழ்ந்துள்ளது. இந்த எண்ணிக்கை நாட்டின் மொத்த இறப்புகளில் 18% ஆகும். உற்பத்தியின்மை காரணமாக ஏற்பட்ட பொருளாதார இழப்பு, இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 1.4% ஆக உள்ளது. அது ₹260,000 கோடிக்கு சமம். இந்த ஆய்வுக்கு UNEP., பில் மற்றும் மெலிண்டா கேட்ஸ் அறக்கட்டளை மற்றும் ICMR ஆகியவை உதவியுள்ளன.

**3. NPCIஉடன் இணைந்து தொடுதலற்ற 'RuPay Select' பற்றட்டையை அறிமுகப்படுத்தியுள்ள இந்திய வங்கி எது?**

அ. பாரத வங்கி

**ஆ. சென்ட்ரல் பாங்க் ஆப் இந்தியா ☑**

இ. பஞ்சாப் தேசிய வங்கி

ஈ. ICICI வங்கி

❖ அண்மையில், இந்திய கொடுப்பனவு நிறுவனத்துடன் (NPCI) இணைந்து தொடுதலற்ற 'RuPay Select' பற்றட்டையை சென்ட்ரல் பாங்க் ஆப் இந்தியா அறிமுகப்படுத்தியது. இந்தப் பற்றட்டையை, பயனர்கள்

உறுப்புத்துவம் பெறுவதற்கு, கால்ப் களம், உடற்பயிற்சிக்கூடம் மற்றும் உணவகங்களில் பயன்படுத்திக் கொள்ளலாம். National Common Mobility Debit Card (NCMC)மூலம் தள்ளுபடி செய்யப்பட்ட உடல்நலப் பரிசோதனைகளையும் பயனர்கள் பெறலாம்.

**4.இந்தியாவின் முதலாவது பிரம்மாண்ட தோல் பூங்கா நிறுவப்படவுள்ள இடம் எது?**

அ. மும்பை

ஆ. சென்னை

இ. ஹைதராபாத்

**ஈ. கான்பூர் ☑**

- ❖ உத்தர பிரதேச மாநில அரசானது இந்தியாவின் முதலாவது பிரம்மாண்ட தோல் பூங்காவை கான்பூரில் நிறுவவுள்ளது. இத்திட்டத்திற்கு, மத்திய வணிகம் மற்றும் தொழிற்துறை அமைச்சகம் தனது ஒப்புதலை அளித்துள்ளது. கான்பூரின் இராமாய்பூர் சிற்றூரில், ₹5850 கோடி செலவில், 235 ஏக்கர் பரப்பளவில் இந்தப் பூங்கா அமைக்கப்படவுள்ளது.


**5.இந்தியாவின் முதலாவது லித்தியம் சுத்திகரிப்பு நிலையம் நிறுவப்படவுள்ள மாநிலம் எது?**

**அ. குஜராத் ☑**

ஆ. ஜார்க்கண்ட்

இ. மகாராஷ்டிரா

ஈ. தெலுங்கானா




- ❖ இந்தியாவின் முதலாவது லித்தியம் சுத்திகரிப்பு நிலையமானது குஜராத்தில் அமைக்கப்படவுள்ளது. இந்த நிலையம், மின்கலத்தரத்திலான பொருளை உற்பத்தி செய்ய லித்தியம் தாதுவை செயலாக்கும். இந்நிலையத்தை அமைக்க, ₹1000 கோடிக்கு மேல் மணிகரன் பவர் லிட் முதலீடு செய்யும். 2030'க்குள் மின்னாற்றலில் இயங்கும் வாகனங்களின் எண்ணிக்கையை 30% ஆக உயர்த்தவேண்டும் என்ற இலட்சிய இலக்கை இந்தியா நிர்ணயித்துள்ளது.

**6. போடோவை அதன் இணை–அதிகாரப்பூர்வ மொழியாக ஏற்றுக்கொண்ட மாநில அரசு எது?**

அ. நாகாலாந்து

ஆ. அருணாச்சல பிரதேசம்

**இ. அஸ்ஸாம் ☑**

ஈ. மேகாலயா

बर' राव

- ❖ 2020 டிச.22 அன்று அஸ்ஸாம் மாநில முதலமைச்சர் சர்பானந்தா சோனோவால் தலைமையிலான அஸ்ஸாம் அமைச்சரவை, 'போரோ' என்றும் அழைக்கப்படுகிற போடோ (தேவநாகரி எழுத்துவடிவம்) மொழியை மாநிலத்தின் இணை–அதிகாரப்பூர்வ மொழியாக மாற்றுவதற்கான 'அஸ்ஸாம் அதிகாரபூர்வ மொழித்திருத்த மசோதா'வுக்கு தனது ஒப்புதலை அளித்தது. 2011 மக்கள்தொகை கணக்கெடுப்பின்படி, அஸ்ஸாமில் ஏறக்குறைய 14.16 இலட்சம் போடோ மொழி பேசுபவர்களாக உள்ளனர்.

- அரசியலமைப்பின் எட்டாவது அட்டவணையில் பட்டியலிடப்பட்ட 22 மொழிகளுள் இதுவும் ஒன்றாகும். அது அஸ்ஸாம், அருணாச்சல பிரதேசம், நாகலாந்து, மேகாலயா & மேற்கு வங்கம் ஆகிய மாநிலங்களில் பரவலாக பேசப்படுகிறது.

**7.தென்னிந்தியாவின் முதல், குரங்கிற்கான மீட்பு & மறுவாழ்வு மையம் அமைந்துள்ள மாநிலம் எது?**



அ. தெலுங்கானா ☑

ஆ. ஆந்திர பிரதேசம்

இ. கேரளா

ஈ. கர்நாடகா

- குரங்குகளுக்கான முதல் மீட்பு மற்றும் மறுவாழ்வு மையம் தெலுங்கானாவின் வடக்கு மாவட்டமான நிர்மலில் அமைக்கப்பட்டுள்ளது. இந்த மையத்தை அமைப்பதற்காக ₹2.25 கோடியை அம்மாநில வனத் துறை செலவிட்டுள்ளது. இந்தியாவின் முதல் மையம் ஹிமாச்சல பிரதேச மாநிலத்தில் அமைந்துள்ளது.

**8.நீர்மூழ்கிக்கப்பல்கள் நாள் (Submarine Day) கொண்டாடப்படுகிற தேதி எது?**



அ. டிசம்பர் 08 ☑

ஆ. டிசம்பர் 12

இ. டிசம்பர் 18

ஈ. டிசம்பர் 22

- கடந்த 1967ஆம் ஆண்டு இதேநாளில் இந்தியக் கடற்படையில் INS கல்வாரி என்னும் முதல் நீர்மூழ்கிக் கப்பல் பணிக்கு சேர்க்கப்பட்டது. இதனை நினைவுகூரும் விதமாக ஆண்டுதோறும் டிசம்பர்.8 அன்று நீர்மூழ்கிக்கப்பல்கள் நாள் கொண்டாடப்படுகிறது. பாக்ஸ்டிராட் வகையிலான இந்தக்கப்பல், 29 ஆண்டு சேவைக்குப்பின் 1996 மே 31 அன்று சேவையிலிருந்து நீக்கப்பட்டது.

**9. பன்னாட்டு ஊழல் எதிர்ப்பு நாள் கடைபிடிக்கப்படுகிற தேதி எது?**

அ. டிசம்பர் 09 ☑

ஆ. டிசம்பர் 15

இ. டிசம்பர் 19

ஈ. டிசம்பர் 25

- ஊழல் குறித்து பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்கும், அதனை எவ்வாறு எதிர்த்து போராடுவது என்பது குறித்து பரப்புவதற்குமாக ஒவ்வோர் ஆண்டும் டிசம்பர்.9 அன்று சர்வதேச ஊழல் எதிர்ப்பு நாள் கடைபிடிக்கப்படுகிறது. கடந்த 2003'ஆம் ஆண்டில் மெக்சிகோவில் கையெழுத்திடப்பட்ட ஊழலுக்கு எதிரான ஐநா தீர்மானத்தின் அங்கீகாரத்திற்காகவும் இந்நாள் கடைபிடிக்கப்படுகிறது. "United Against Corruption" என்பது நடப்பாண்டில் (2020) வரும் இந்நாளுக்கான கருப்பொருளாகும்.

**10.தேசிய கணித நாள் கடைபிடிக்கப்படுகிற தேதி எது?**

அ. டிசம்பர் 21

**ஆ. டிசம்பர் 22 ☑**

இ. டிசம்பர் 23

ஈ. டிசம்பர் 24



- இந்தியாவின் புகழ்பெற்ற கணிதவியலாளரான ஸ்ரீநிவாச இராமானுஜன் அவர்களின் பிறந்தநாளைக் கொண்டாடும் விதமாக ஆண்டுதோறும் டிச.22 அன்று தேசிய கணித நாள் கொண்டாடப்படுகிறது. இராமானுஜத்தின் 125ஆவது பிறந்தநாளை சிறப்பிக்கும் விதமாக இந்தியாவின் முன்னாள் பிரதமர் மன்மோகன் சிங்கால் இராமானுஜத்தின் பிறந்தநாள், 'தேசிய கணித நாள்' என நிறுவப்பட்டது. மேலும், கடந்த 2012ஆம் ஆண்டு 'தேசிய கணித ஆண்டு' எனவும் அறிவிக்கப்பட்டது.
- 'கணிதமேதை' ஸ்ரீநிவாச இராமானுஜன், கடந்த 1887ஆம் ஆண்டில் தமிழ்நாட்டின் ஈரோடு மாவட்டத்தில் பிறந்தார். 1918'இல் லண்டன் ராயல் சொசைட்டியின் உறுப்பினராக இராமானுஜன் ஆனார் (FRS பட்டம்). 1920 ஏப்ரல்.6 அன்று அவர் காலமானார்.

---

## தமிழ்நாடு நடப்பு நிகழ்வுகள்

- 2019-20ஆம் ஆண்டில் செய்த சிறப்பான சேவைகளுக்காக 'மேக்தூத் விருது'களை அஞ்சல் துறை பணியாளர்களுக்கு அஞ்சல் துறை வழங்கி கௌரவித்துள்ளது. சென்னை மண்டலத்தின் சந்தைப்படு -த்துதல் பிரிவில் ஒருங்கிணைப்பாளராக பணிபுரியும் சீனிவாசன், 'மேக்தூத் விருது' பெற்றவர்களுள் ஒருவராவார். சென்னையில் உள்ள அஞ்சல் தொழில்நுட்பத்துக்கான திறன்மிகு மையத்தின் துணை இயக்குநரான V M சக்திவேலும் இந்த விருதைப் பெற்றார்.
- தஞ்சாவூர் கரந்தையைச்சார்ந்த மாணவர் ரியாஸுதீன் வடிவமைத்துள்ள விஷன் 1 மற்றும் விஷன் 2 என்ற இரு சிறிய செயற்கைக்கோள்கள், 2021'இல் NASA விண்வெளி தளத்திலிருந்து விண்ணில் ஏவப்படவுள்ளன.

---

## நடப்பு நிகழ்வுகள்

**1.அண்மையில் சோதனைக்கு உட்படுத்தப்பட்ட MRSAM (Medium Range Surface to Air Missile) என்ற ஏவுகணை, கீழ்க்காணும் எந்த நாட்டோடு இணைந்து உருவாக்கப்பட்டது?**



அ. இரஷ்யா

**ஆ. இஸ்ரேல் ☑**

இ. ஐக்கிய அமெரிக்க நாடுகள்

ஈ. பிரான்ஸ்

❖ தரையிலிருந்து வானுக்கு பாயும் நடுத்தர இரக ஏவுகணையை (Medium Range Surface to Air Missile) இந்தியா வெற்றிகரமாக சோதனை செய்துள்ளது. ஒடிசா மாநில கடற்கரைக்கு அருகேயுள்ள சந்திப்பூர் ஒருங்கிணைந்த சோதனை தளத்திலிருந்து, பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனம் இந்தச் சோதனையை செய்தது. விமானம்போன்ற ஆளில்லாத அதிவேக வான் இலக்கு ஒன்றை நேரடியாக வெற்றிகரமாக இந்த ஏவுகணை தாக்கி அழித்ததன்மூலம் முக்கிய மைல்கல்லை DRDO எட்டியது. இந்த நடுத்தர இரக ஏவுகணையை இந்தியாவின் பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனம் மற்றும் இஸ்ரேலின் IAI ஆகியவை இணைந்து உருவாக்கியுள்ளன.

**2.அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற, தேசிய திரைப்பட வளர்ச்சிக்கழகம் சார்ந்த நகரம் எது?**

அ. புது தில்லி

**ஆ. மும்பை ☑**

இ. அகமதாபாத்

ஈ. புனே

NFDC
cinemas of india

❖ தேசிய திரைப்பட வளர்ச்சிக்கழகமானது மும்பையைச் சார்ந்த ஒரு மத்திய பொதுத்துறை நிறுவனம் ஆகும். அது, 1975ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்ட நிறுவனமாக உருவாக்கப்பட்டது. இந்திய திரைப்படத் துறையின் ஒருங்கிணைந்த வளர்ச்சியை மேம்படுத்துவதே இந்நிறுவனத்தின் நோக்கமாகும்.

❖ அண்மையில், திரைப்படப்பிரிவு, திரைப்படத்திருவிழா இயக்குநரகம், இந்தியாவின் தேசிய திரைப்படக் காப்பகம், இந்திய குழந்தைகள் திரைப்படச் சங்கம் ஆகியவற்றை தேசிய திரைப்பட வளர்ச்சிக்கழகத்துட–ன் இணைக்க மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்தது.

**3.இந்திய விண்வெளி ஆய்வுமையமானது (ISRO) கீழ்க்காணும் எந்த நிறுவனத்தில், விண்வெளிக்கான பிராந்திய கல்வி மையத்தை (RAC–S) நிறுவவுள்ளது?**

**அ. IIT– BHU ☑**

ஆ. IIT– கௌகாத்தி

இ. IISC, பெங்களூரு

ஈ. IIT– ரூர்க்கி

❖ இந்திய விண்வெளி ஆய்வுமையமானது இந்திய தொழில்நுட்ப நிறுவனத்தில் (BHU) ஒரு பிராந்திய கல்வி மையத்தை நிறுவவுள்ளது. மாணவர்களிடையே ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி எண்ண ஓட்டத்தை மேம்படுத்துவதற்காக, இந்தக் கல்விமையம் அமைக்கப்படும். மாநாடுகள், கண்காட்சிகள் போன்ற திறன் மேம்பாட்டு திட்டங்களும் ஏற்பாடு செய்யப்படும்.

**4.நலவாழ்வு மற்றும் குடும்பநல அமைச்சகமானது CoWIN'க்கு வலுசேர்க்கும் விதமாக கீழ்க்காணும் எந்த அமைச்சகத்துடன் இணைந்து போட்டியொன்றைத் தொடங்கியுள்ளது?**

அ. இளையோர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டு அமைச்சகம்

**ஆ. மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகம் ☑**

இ. வெளியுறவு அமைச்சகம்

ஈ. கல்வி அமைச்சகம்




❖ COVID-19 பெருங்கொள்ளை நோய்க்கு எதிரான தடுப்பு மருந்து கண்டுபிடிக்கப்பட்ட பின்னர் அதனை தேசிய அளவில் முறையாக வழங்கும் நோக்கத்தில் மத்திய சுகாதாரம் மற்றும் குடும்பநலன், மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகங்கள் இணைந்து பிரம்மாண்ட சவாலான 'CoWIN' என்ற புதிய டிஜிட்டல் தளத்தை உருவாக்கியுள்ளன.

❖ 'MSH' என்று அழைக்கப்படும் 'MeitY Startup Hub' என்னும் இணையதளத்தில் இத்தளம் அமைக்கப்பட உள்ளது. பங்கேற்பாளர்கள் ஜன.15 வரை விண்ணப்பிக்கலாம். சிறந்த ஐந்து விண்ணப்பதாரர்களுக்கு தங்களது தீர்வுகளை தளத்தினோடு ஒருங்கிணைத்து செயல்பட வாய்ப்பு வழங்கப்படும்.

**5.சமீபத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்ட, பத்தாம் வகுப்புக்குப்பிறகு கல்வியைத் தொடர்வதற்கு பட்டியல் பிரிவு (SC) மாணாக்கர்களுக்கு வழங்கப்படும் உதவித்தொகையில் நடுவணரசின் பங்கு என்ன?**

அ. 40%

ஆ. 50%

**இ. 60% ☑**

ஈ. 90%



❖ நான்கு கோடி பட்டியலின மாணாக்கர்கள் பத்தாம் வகுப்பிற்குப் பிறகு கல்வியைத் தொடரும் வகையில் அடுத்த ஐந்தாண்டுகளில் ₹59,000 கோடியை கல்வி உதவித்தொகையாக வழங்க பொருளாதார விவ –காரங்களுக்கான அமைச்சரவைக்குழு ஒப்புதல் அளித்துள்ளது. இதில் ₹35,534 கோடி (60%) மத்திய அரசு நிதியிலிருந்தும் மீதமுள்ள தொகை மாநில அரசு நிதியிலிருந்தும் வழங்கப்படும். பட்டியல் பிரிவைச் சார்ந்த மாணாக்கர்கள் பத்தாம் வகுப்புக்கு பிறகு கல்வியைத் தொடர்வதை ஊக்கப்படுத்துவதற்காக 'PMS–SC' என்னும் திட்டத்தை நடுவணரசு செயல்படுத்தி வருகிறது.

**6. அண்மையில் வெளியிடப்பட்ட, 'சிறுத்தைகளின் நிலை 2018'இன்படி, அதிக அளவில் சிறுத்தைகளைக் கொண்ட மாநிலம் எது?**

அ. தமிழ்நாடு

**ஆ. மத்திய பிரதேசம் ☑**

இ. உத்தர பிரதேசம்

ஈ. குஜராத்



- 2018'இல் நாட்டிலுள்ள சிறுத்தைகள் எண்ணிக்கை குறித்த அறிக்கையை, மத்திய சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை அமைச்சர் பிரகாஷ் ஜவடேகர் தில்லியில் வெளியிட்டார். நாடு முழுவதும் சிறுத்தைகள் எண்ணிக்கை 60% உயர்ந்துள்ளது. இந்தியாவில் தற்போது 12,852 சிறுத்தைகள் உள்ளன. கடந்த 2014ஆம் ஆண்டு மதிப்பீட்டில் இதன் எண்ணிக்கை 7,910 ஆக இருந்தது.
- மத்திய பிரதேசம், கர்நாடகா மற்றும் மகாராஷ்டிரா ஆகிய மாநிலங்களில், அதிகபட்சமாக முறையே 3421; 1783; 1690 சிறுத்தைகள் தற்போது உள்ளன.

**7.தேசிய துளிர் நிறுவனங்கள் விருதுகளானவை முதன்முதலில் எந்த ஆண்டில் வழங்கப்பட்டன?**

அ. 2017

ஆ. 2018

**இ. 2019 ☑**

ஈ. 2020

#startupindia

- வணிகம் மற்றும் தொழிற்துறை அமைச்சகத்தின் கீழியங்கும் தொழிலகம் மற்றும் உள்நாட்டு வர்த்தக மேம்பாட்டுத் துறையானது 2019'ஆம் ஆண்டு முதல் தேசிய துளிர் நிறுவனங்கள் விருதுகளை வழங்கி வருகிறது. புதுமையான தயாரிப்புகள் அல்லது தீர்வுகளை உருவாக்கி சமூக தாக்கத்தை ஏற்படுத்தும் சிறந்த துளிர் நிறுவனங்களுக்கு வெகுமதி அளிப்பதை இவ்விருது நோக்கமாகக்கொண்டுள்ளது. இந்த விருதின் 2021ஆம் ஆண்டுக்கான பதிப்பு அண்மையில் தொடங்கப்பட்டது. 15 பரந்த துறைகளாக வகைப்படுத்தப்பட்ட 49 பகுதிகளில் விருதுகள் வழங்கப்படவுள்ளன.

**8.அண்மையில் எந்தத் தேதியில், பன்னாட்டு மனித ஒருமைப்பாடு நாள் கடைப்பிடிக்கப்பட்டது?**

**அ. டிசம்பர் 20 ☑**

ஆ. டிசம்பர் 21

இ. டிசம்பர் 22

ஈ. டிசம்பர் 23



- ஐநா அவையானது கடந்த 2002 டிச.20 அன்று பன்னாட்டு மனித ஒருமைப்பாடு நாளை அறிவித்தது. வளர்ந்துவரும் நாடுகளில் வறுமையை ஒழிப்பது, வேற்றுமையில் ஒற்றுமை காண்பது, மனித ஒருமை –ப்பாடு குறித்த விழிப்புணர்வை பொதுமக்களிடையே ஏற்படுத்துவது மற்றும் மனித சமூகமேம்பாட்டுக்கு உதவுவதே இந்நாளின் நோக்கமாகும்.

**9.எங்கு இயங்கும் இந்தியாவின் முதல் ஓட்டுநரில்லா இரயிலை பிரதமர் மோடி தொடங்கிவைத்துள்ளார்?**



அ. சென்னை

**ஆ. தில்லி ☑**

இ. மும்பை

ஈ. பெங்களூரு

- இந்தியாவில் முதன்முறையாக ஓட்டுநரில்லாமல் இயக்கப்படும் ரயில் சேவையை தில்லி மெட்ரோவின் மஜந்தா மார்க்கத்திலும் (மேற்கு ஜனக்புரி – தாவரவியல் பூங்கா), வானூர்தி நிலைய மார்க்கத்தில் முழுவதுமாக இயங்கக்கூடிய தேசிய பொதுப்போக்குவரத்து அட்டை சேவையையும் பிரதமர் மோடி காணொலி வாயிலாகத் தொடங்கிவைத்தார்.

**10. DRDO'ஆல் வழங்கப்படும் 'ஆண்டின் சிறந்த அறிவியலாளருக்கான விருது–2018'ஐ பெற்றவர் யார்?**

**அ. ஹேமந்த் குமார் பாண்டே ☑**

ஆ. டெஸ்ஸி தாமஸ்

இ. சுதிர் காமத்

ஈ. பிரவீன் K மேத்தா

- வெண்தோல்நோய் சிகிச்சைக்கான, 'லூகோஸ்கின்' மருந்தை உள்ளடக்கிய மூலிகை மருந்துகளை உருவாக்குவதில் அவராற்றிய பங்களிப்புக்காக Dr ஹேமந்த் குமார் பாண்டேவுக்கு பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி அமைப்பானது 'ஆண்டின் சிறந்த அறிவியலாளருக்கான விருது–2018' வழங்கியுள்ளது. உத்தரகண்ட் மாநிலத்தின் பித்தோர்கரில் உள்ள DRDO'இன் உயிரி–ஆற்றல் ஆராய்ச்சிக்கான ராணுவ நிறுவனத்தில் (DIBER) கடந்த 25 ஆண்டுகளாக பாண்டே ஆராய்ச்சி மேற்கொண்டு வருகிறார்.

# நடப்பு நிகழ்வுகள்

**1.சுகாதாரமற்ற கழிப்பறைகள், மனிதக்கழிவுகளை அகற்றுவோர் குறித்த தகவல்களை அரசுக்கு தெரிவிப் –பதற்காக 'ஸ்வச்சதா அபியான்' என்ற திறன்பேசி செயலியை அறிமுகப்படுத்தியுள்ள மத்திய அமைச்சகம் எது?**

அ. வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் அமைச்சகம்

**ஆ. சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் அமைச்சகம் ☑**

இ. ஊரக வளர்ச்சி அமைச்சகம்

ஈ. சாலைப்போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலை அமைச்சகம்

❖ மத்திய சமூக நீதி & அதிகாரமளித்தல் அமைச்சகமானது, 'ஸ்வச்சதா அபியான்' என்னும் திறன்பேசிச் செயலியை அறிமுகப்படுத்தியுள்ளது. சுகாதாரமற்ற கழிப்பறைகள் குறித்த நம்பகத்தன்மையான தகவ –லை தொண்டு நிறுவனங்கள், சமூக அமைப்புகள் மற்றும் பொதுமக்களிடமிருந்து பெற்றுக்கொள்ளும் நோக்கத்தோடு இந்தச் சேவை தொடங்கப்பட்டுள்ளது.

❖ சுகாதாரமற்ற கழிப்பறைகள் மற்றும் மனிதக்கழிவுகளை அகற்றுவோர் குறித்து இச்செயலியின்மூலம் தகவல்கள் தெரிவிக்கலாம். அதன்மூலம் சுகாதாரமான கழிவறை பொருத்தப்பட்டு, மனிதக்கழிவுகளை அகற்றுவோருக்கு மறுவாழ்வு அளித்து, கண்ணியமான வாழ்க்கையை அவர்களால் வாழவியலும்.

**2.திறன் மேம்பாட்டு அமைச்சகத்தால் தொடங்கப்பட்ட இணையவழி கற்றல் தளத்தின் பெயர் என்ன?**

அ. Bharatskills ☑

ஆ. India Skills

இ. Skill on line

ஈ. Skill on board

❖ தொழிற்பயிற்சி நிறுவனங்களின் (ITI) மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுக்காக திறன் மேம்பாடு மற்றும் தொழில்முனைவு அமைச்சகத்தின் உதவியுடன் பயிற்சிக்கான தலைமை இயக்குநரகம், 'பாரத்ஸ்கில்ஸ்' என்ற இணையவழி கற்றல் தளத்தை அறிமுகப்படுத்தியது. டிஜிட்டல் திறன்களை வழங்கி இந்திய இளையோரின் வேலைவாய்ப்புகளை அதிகரிப்பதற்காக மைக்ரோசாப்ட் மற்றும் NASSCOM அறக்கட்ட –ளையுடன் ஒப்பந்தமொன்றில் பயிற்சிக்கான தலைமை இயக்குநரகம் கையெழுத்திட்டுள்ளது.

❖ நாடு முழுவதுமுள்ள 3000 ITI'களில் படிக்கும் சுமார் ஒரு இலட்சத்து இருபது ஆயிரம் மாணவர்களுக்கு இதன்மூலம் பயிற்சி அளிக்கப்படும்.

**3. ₹10,000 கோடி மதிப்புள்ள வளர்ச்சித்திட்டங்கள் 100 நாட்களில் முடிக்கப்படும் என்று அறிவித்துள்ள இந்திய மாநிலம் எது?**

அ. தமிழ்நாடு **ஆ. கேரளா ☑**

இ. ஆந்திர பிரதேசம் ஈ. கர்நாடகா

❖ கேரள மாநில அரசானது ₹10,000 கோடி மதிப்புள்ள வளர்ச்சித்திட்டங்கள் அடுத்த நூறு நாட்களுக்குள் முடிக்கப்படும் அல்லது தொடங்கப்படும் என்று அறிவித்துள்ளது. பாலக்காட்டில் உள்ள இராணுவப்பூங்கா உள்ளிட்ட 9 புதிய தொழிற்துறை பிரிவுகளும் திறக்கப்படும் என்றும் அம்மாநில முதலமைச்சர் பினராயி விஜயன் அறிவித்துள்ளார். 'குடும்பஸ்ரீ' என்ற வறுமை ஒழிப்புத்திட்டத்தின்மூலம் வேலைவாய்ப்புகளை உருவாக்குவதிலும் அம்மாநில அரசு முனைப்புடன் செயல்பட்டு வருகிறது.

**4.அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற, 'பிரம்மபுத்ரா ஆமந்திரன் அபியான்' என்பது கீழ்க்காணும் எவ்விரு மாநிலங்களில் நடைபெறவுள்ளது?**

**அ. அருணாச்சல பிரதேசம் மற்றும் அஸ்ஸாம் ☑**

ஆ. அருணாச்சல பிரதேசம் மற்றும் மேகாலயா

இ. அருணாச்சல பிரதேசம் மற்றும் மிசோரம்

ஈ. அஸ்ஸாம் மற்றும் மேகாலயா




❖ மத்திய விளையாட்டு & இளையோர் நலத்துறை அமைச்சரான கிரண் ரிஜிஜு, "பிரம்மபுத்ரா ஆமந்திரன் அபியான்" என்னும் ஆற்றுவழியிலான பயணத்திட்டத்தை கொடியசைத்து தொடக்கிவைத்துள்ளார். 917 கிமீ நீளமுள்ள இந்தப்பயணத்திட்டம், அருணாச்சல பிரதேசம் மற்றும் அஸ்ஸாம் ஆகிய மாநிலங்களை உள்ளடக்கி நடைபெறவுள்ளது. அருணாச்சல பிரதேச மாநில அரசு, அஸ்ஸாம் மாநில அரசு மற்றும் NDRF ஆகியவற்றுடன் இணைந்து ஜல் சக்தி அமைச்சகம் இந்த 1 மாதகால பயணத்தை ஏற்பாடு செய்துள்ளது.

**5.நிமோனியாவுக்கு எதிரான நாட்டின் முதல் உள்நாட்டு தடுப்பூசியை உருவாக்கிய இந்திய நிறுவனம் எது?**

**அ. சீரம் இந்தியா நிறுவனம் ☑**

ஆ. Dr ரெட்டி'ஸ்

இ. சன் பார்மா

ஈ. சிப்லா நிறுவனம்

❖ சிறார்களுக்கு, 'ஸ்ட்ரெப்டோகாக்கஸ் நிமோனியா' காரணமாக ஏற்படும் நுரையீரல் அழற்சி நோய்க்கு எதிராக நோய்த்தடுப்பு செய்வதற்காக, நிமோனியாவுக்கு எதிரான இந்தியாவின் முதல் உள்நாட்டு தடுப்பூசியை சீரம் இந்தியா நிறுவனம் உருவாக்கியுள்ளது. இந்தத்தடுப்பூசி, பைசர் & கிளாக்சோஸ்மித் கிலைன் ஆகிய இரண்டு வெளிநாட்டு நிறுவனங்களால் தயாரிக்கப்படும் தடுப்பூசிகளை விட மலிவு விலையில் கிடைக்கப்பெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது

**6. யோக்தான் பயிற்சியுடன் தொடர்புடைய அமைப்பு எது?**

அ. இந்திய விண்வெளி ஆய்வு மையம்

**ஆ. தேசிய மாணவர் படை ☑**

இ. செஞ்சிலுவைச் சங்கம்

ஈ. புலனாய்வகம்

- தேசிய மாணவர் படையின் தலைமை இயக்குநரக மின்னணு மன்றமானது சமீபத்தில் புது தில்லியில் தொடங்கப்பட்டது. தேசிய மாணவர் படை (NCC) தலைமை இயக்குநரகத்தின் இணையதளத்தில் இடம் பெற்றுள்ள இம்மின்னணு மன்றத்தின்மூலம் நாடு முழுவதுமுள்ள தேசிய மாணவர் படையினர் (NCC), தேசிய மாணவர் படைகுறித்த தங்களது பல்வேறு அனுபவங்களைப் பகிர்ந்துகொள்ளலாம். COVID–19 பெருங்கொள்ளைநோய்க்கு எதிரான நாட்டின் போரில் முன்கள வீரர்களாக ஒரு லட்சத்துக்கும் மேலான தேசிய மாணவர் படையினர் பெரும்பங்காற்றியுள்ளனர்.

**7.மத்திய தரைக்கடல் & கருங்கடல் மீன்வள நிலை குறித்த அறிக்கையை வெளியிட்ட அமைப்பு எது?**

அ. IMF

**ஆ. FAO ☑**

இ. உலக வங்கி

ஈ. WTO

- மத்திய தரைக்கடல் மற்றும் கருங்கடல் மீன்வளத்தின் நிலை – 2020 (SoMFi 2020)'ஐ உணவு மற்றும் உழவு அமைப்பின் மத்திய தரைக்கடலுக்கான பொது மீன்வள ஆணையம் வெளியிட்டுள்ளது. இந்த அறிக்கையின்படி, மத்திய தரைக்கடல் மற்றும் கருங்கடல் கடல் சுற்றுச்சூழல் அமைப்புகளில் 75 சதவீத மீன்வளங்கள் அதிகப்படியான மீன்பிடிக்கு ஆளாகியுள்ளன. ஆனால், கடந்த பத்தாண்டுகளில் இல்லாத அளவுக்கு முதல்முறையாக இதுபோன்ற அதிகப்படியான மீன்பிடிகளின் எண்ணிக்கை குறைந்துள்ளது.

**8.நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் நடைமுறைக்கு வந்த ஆண்டு எது?**

அ. 1995

**ஆ. 1986 ☑**

இ. 1984

ஈ. 1996




- 1986 டிச.24 அன்று, நுகர்வோர் பாதுகாப்புச்சட்டம் இந்திய குடியரசுத்தலைவரின் ஒப்புதலைப்பெற்று நடைமுறைக்கு வந்தது. இந்த நிகழ்வைக் குறிக்கும் வகையில், நுகர்வோர் முக்கியத்துவம், அவர்களின் உரிமைகள் மற்றும் பொறுப்புகள் குறித்த விழிப்புணர்வை பரப்புவதற்காக ஒவ்வோர் ஆண்டும் டிச.24 அன்று தேசிய நுகர்வோர் நாள் இந்தியாவில் அனுசரிக்கப்படுகிறது. 'The Sustainable Consumer' என்பது நடப்பாண்டில் (2020) வரும் தேசிய நுகர்வோர் நாளுக்கான கருப்பொருளாகும்.

**9.இந்தியாவின் நூறாவது கிசான் இரயிலானது, மகாராஷ்டிர மாநிலத்திற்கும் கீழ்க்காணும் வேறெந்த மாநிலத்திற்கும் இடையே பயணப்படுகிறது?**

அ. பீகார்

**ஆ. மேற்கு வங்கம் ☑**

இ. கர்நாடகா

ஈ. உத்தர பிரதேசம்



- மகாராஷ்டிராவில் உள்ள சங்கோலாவிலிருந்து மேற்கு வங்கத்தில் உள்ள ஷாலிமார் வரையிலான நூறாவது 'விவசாயிகள் இரயிலை' காணொலி மூலம் பிரதமர் மோடி தொடக்கிவைத்தார். காய்கறிகள், பழங்கள், பால் மற்றும் மீன் உள்ளிட்ட விரைவில் அழுகும் பொருள்களை முழு பாதுகாப்புடன் கொண்டு செல்வதற்கான நடமாடும் குளிர்பதன சேமிப்பு வசதிதான் 'விவசாயிகள் இரயில்'.

- காய்கறிகள் மற்றும் பழங்களை கொண்டுசெல்வதற்கான கட்டணத்தில் 50% மானியத்தையும் இந்திய அரசு வழங்குகிறது. இந்த 'விவசாயிகள் ரயில்' விவசாயிகள் தங்கள் விவசாய விளைபொருட்களை நாடு முழுவதும் கொண்டுசெல்ல உதவுகிறது.

**10. ஐநா அவையால் முதல் 'பன்னாட்டு கொள்ளைநோய் தயார்நிலை நாள்' கடைபிடிக்கப்பட்ட தேதி எது?**

அ. 25 டிசம்பர், 2020

ஆ. 15 டிசம்பர், 2020

**இ. 27 டிசம்பர், 2020 ☑**

ஈ. 22 டிசம்பர், 2020



- ஐநா அவையானது 2020 டிச.27 அன்று உலகெங்கும் முதன்முறையாக, 'பன்னாட்டு கொள்ளைநோய் தயார்நிலை நாள் – International Day of Epidemic Preparedness'ஐ அனுசரித்தது. கொள்ளைநோய் உருவாதல், பரவுதல் ஆகியவற்றை கட்டுப்படுத்துதற்கும் நிர்வகிப்பதற்கும் அரசாங்கம் மற்றும் சுகாதாரப் பணியாளர்கள்போன்றவர்களின் பங்கை இந்நாள் அங்கீகரிக்கிறது. கொள்ளைநோய்களுக்கு எதிரான தடுப்பு, தயார்நிலை மற்றும் கூட்டாண்மை ஆகியவற்றின் முக்கியத்துவத்தையும் இது ஊக்குவிக்கிறது.

# நடப்பு நிகழ்வுகள்

**1.ராம்சர் தளமாக அறிவிக்கப்பட்டுள்ள சோ கார் ஈரநிலமானது கீழ்க்காணும் எந்த இந்திய மாநிலத்தில் / யூனியன் பிரதேசத்தில் அமைந்துள்ளது?**



அ. பஞ்சாப்

**ஆ. லடாக் ☑**

இ. மேற்கு வங்கம்

ஈ. ஆந்திர பிரதேசம்

❖ லடாக்கில் அமைந்துள்ள சோ கார் ஈரநிலமானது இந்தியாவின் 42ஆவது ராம்சர் தளமாக அதாவது பன்னாட்டு முக்கியத்துவம்வாய்ந்த ஈரநிலமாக அறிவிக்கப்பட்டுள்ளது. தெற்காசியாவில் இதுபோன்ற தளங்களை அதிக எண்ணிக்கையில் கொண்டுள்ள நாடு இந்தியாவாகும். உயரமான இடத்தில் அமைந்துள்ள ஈரநிலமான சாங்தாங் பகுதி, லடாக்கில் உள்ள நன்னீர் ஏரியான ஸ்டார்சபுக் சோ மற்றும் மிகையுவர் ஏரியான சோ கார் ஆகிய இரண்டு இணைக்கப்பட்ட ஏரிகளைக் கொண்டுள்ளது.

**2.அண்மையில் காலமான மூத்த எழுத்தாளரும் இயற்கை ஆர்வலருமான சுகதகுமாரி சார்ந்த மாநிலம் எது?**



**அ. கேரளா ☑**

ஆ. ஆந்திர பிரதேசம்

இ. கர்நாடகா

ஈ. மகாராஷ்டிரா

❖ புகழ்மிக்க மலையாளக்கவியும், இயற்கை ஆர்வலரும், பெண்ணுரிமை ஆர்வலருமான சுகதகுமாரி (86) அண்மையில் காலமானார். 15 கவிதைத்தொகுப்புகளை அவர் வெளியிட்டுள்ளார். கேரள மாநில மகளிர் ஆணையத்தின் முதல் தலைவராக இருந்த அவர், 'குடும்பஸ்ரீ திட்டங்கள்' தொடங்குவதற்கு தலைமை தாங்கினார். 'பத்மஸ்ரீ', 'சரஸ்வதி சம்மான்' உள்ளிட்ட பல்வேறு விருதுகளை அவர் பெற்றுள்ளார்.

**3.எந்த மாநிலத்தில், இந்தியாவின் மிகப்பெரிய ஹாக்கி மைதானத்தை அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது?**



அ. பஞ்சாப்

**ஆ. ஒடிசா ☑**

இ. மேற்கு வங்கம்

ஈ. கர்நாடகா

❖ இந்தியாவின் மிகப்பெரிய ஹாக்கி மைதானமானது ரூர்கேலா நகரில் கட்டப்படவுள்ளது என்று ஒடிசா மாநில முதலமைச்சர் நவீன் பட்நாயக் அறிவித்துள்ளார். அமையவுள்ள இந்த மைதானத்தில், 2023ஆம் ஆண்டின் ஆடவர் ஹாக்கி உலகக்கோப்பை போட்டிகளை நடத்த வாய்ப்புள்ளது. 20,000 இருக்கைகள் கொண்ட இவ்வரங்கம், பிஜு பட்நாயக் தொழில்நுட்ப பல்கலைக்கழக வளாகத்தில் கட்டப்படும்.

**4.அண்மைச்செய்திகளில் இடம்பெற்ற, 'பாலின பூங்கா' என்பது கீழ்க்காணும் எம்மாநிலத்தின் தன்னாட்சி அமைப்பாகும்?**

அ. அருணாச்சல பிரதேசம்

ஆ. அஸ்ஸாம்

இ. மிசோரம்

**ஈ. கேரளா ☑**

❖ 'பாலின பூங்கா' என்பது கேரள மாநில அரசின்கீழ் உள்ள ஒரு தன்னாட்சி அமைப்பாகும். மாநிலத்தில், பாலின சமத்துவம்குறித்த பல்வேறு திட்டங்கள் மற்றும் நிகழ்வுகளை அது ஏற்பாடு செய்து வருகிறது. புது தில்லியைச் சார்ந்த ஐநா பெண்கள் அமைப்பின் பன்னாட்டு அலுவலகத்துடன் இணைந்து, பெண்கள் தன்முன்னேற்றம் மற்றும் பாலின சமத்துவத்திற்கான தெற்காசியாவின் மையமாக செயல்படுவதற்காக ஐநா பெண்கள் அமைப்புடன் கூட்டிணைய தயாராக இருப்பதாக சமீபத்தில் அந்நிறுவனம் அறிவித்தது.

**5.பசுமை சேனல் அந்தஸ்து வழங்கப்பட்ட முதல் தனியார் துறை பாதுகாப்பு நிறுவனம் எது?**

அ. TATA குழுமம்

**ஆ. L&T Defense ☑**

இ. கல்யாணி குழுமம்

ஈ. SSS Defense

❖ L&T Defense நிறுவனத்துக்கு பாதுகாப்பு அமைச்சகம் அண்மையில் 'கிரீன் சேனல் அந்தஸ்தை' வழங்கி உள்ளது. இதன்மூலம் இந்த அந்தஸ்தைப்பெற்ற முதல் தனியார் துறை பாதுகாப்பு நிறுவனமாக L&T Defense நிறுவனம் மாறியுள்ளது. ஒரு நிறுவனத்திற்கு இந்தத் தகுதி வழங்கப்பட்டால், அதற்கு பல்வேறு சலுகைகள் வழங்கப்படும். 'இந்தியாவில் தயாரிப்போம்' என்ற முன்னெடுப்பின் ஒருபகுதியாக பாதுகாப்பு அமைச்சகத்தால் 'கிரீன் சேனல் கொள்கை' ஆனது 2017'இல் அறிமுகப்படுத்தப்பட்டது.

**6.இந்தியாவின் முதல் வெப்பக்காற்று பலூன் முறையிலான வனப்பயணம் தொடங்கப்பட்ட மாநிலம் எது?**

அ. உத்தர பிரதேசம்

**ஆ. மத்திய பிரதேசம் ☑**

இ. குஜராத்

ஈ. மகாராஷ்டிரா



❖ இந்தியாவின் முதல் வெப்பக்காற்று பலூன் முறையிலான வனப்பயணமானது, பந்தௌகர் புலிகள் காப்பகத்தில் தொடங்கப்பட்டுள்ளது. இப்புலிகள் காப்பகம் மத்திய பிரதேச மாநிலத்தில் அமைந்துள்ளது. இந்தத்திட்டத்தின்கீழ், தடைசெய்யப்பட்ட இடையக பகுதிகளில் வாழும் புலிகள், சிறுத்தைகள், இந்திய தேனுண்ணுங்கரடிகள் மற்றும் பிற கானுயிரிகளை மக்கள் வெகு உயரத்திலிருந்து பார்க்கலாம்.

**7.தேசிய ஆடவர் கிரிக்கெட் அணியின் தலைமை தேர்வாளராக நியமிக்கப்பட்டுள்ள இந்திய வீரர் யார்?**



அ. ஹர்பஜன் சிங்

ஆ. V V S இலக்ஷ்மணன்

**இ. சேத்தன் சர்மா ☑**

ஈ. முகமது கைப்

❖ இந்தியாவின் முன்னாள் வேகப்பந்து வீச்சாளரான சேத்தன் சர்மா, தேசிய ஆடவர் கிரிக்கெட் அணியின் தலைமை தேர்வாளராக நியமிக்கப்பட்டுள்ளார். அகில இந்திய சீனியர் தேர்வுக்குழுவிற்கு மேலும் இரு உறுப்பினர்களை கிரிக்கெட் ஆலோசனைக்குழுமம் தேர்வுசெய்துள்ளது. ஓராண்டுகாலம்கழித்து, தெரிவு செய்யப்பட்டவர்களை மதிப்பாய்வு செய்து BCCI'க்கு அகில இந்திய சீனியர் தேர்வுக்குழு பரிந்துரைகளை வழங்கும்.

**8.அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற, 'PRADAN' இணையதளத்துடன் தொடர்புடைய அமைப்பு எது?**

அ. DRDO

**ஆ. ISRO ☑**

இ. UPSC

ஈ. UGC

❖ சந்திரயான்–2 திட்டத்தின் முதல் தொகுப்பை பொது மக்களின் பார்வைக்கு வெளியிட்டுள்ளதாக இந்திய விண்வெளி ஆய்வுமையம் (ISRO) அறிவித்துள்ளது. சந்திரயான்–2 திட்டம், 2019 ஜூலை.22 அன்று ஸ்ரீ ஹரிகோட்டாவில் உள்ள சதீஷ் தவான் ஏவுதளத்திலிருந்து ஏவப்பட்டது. ISRO திட்டங்கள் குறித்த தரவுகளின் முதன்மை காப்பகமான இந்திய விண்வெளி அறிவியல் தரவு மையம், 'PRADAN' இணைய தளத்தின்மூலம் தரவுகளை வெளியிட்டுள்ளது.

**9.அண்மையில், 'பசல் ரகத் யோஜனா' மற்றும் 'பசுதன் யோஜனா' ஆகியவற்றை தொடங்கிய மாநில அரசு எது?**

அ. பீகார்

**ஆ. ஜார்க்கண்ட் ☑**

இ. கர்நாடகா

ஈ. உத்தர பிரதேசம்

❖ ஜார்கண்ட் மாநில அரசு தனது அண்மைய அமைச்சரவைக் கூட்டத்தில், அனைத்து உழவர்கள் மற்றும் வேளாண் கடன்களையும் ₹50,000 வரை தள்ளுபடி செய்ய முடிவுசெய்துள்ளது. பயிர் இழப்பை எதிர் கொண்ட உழவர்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கு, 'பசல் ரகத் யோஜனா' மற்றும் கால்நடை வளர்ப்பில் ஈடுபடும் குடும்பங்களின் வருவாயை அதிகரிக்க, 'பசுதன் யோஜனா' ஆகிய 2 திட்டத்திற்கும் அம்மாநில அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

**10. 'SKYROS' என்ற பெயரில் இந்தியா மற்றும் கீழ்க்காணும் எந்த நாட்டின் போர் விமானங்கள் பயிற்சி மேற்கொள்ளவுள்ளன?**

அ. இஸ்ரேல்

**ஆ. பிரான்ஸ் ☑**

இ. இரஷ்யா

ஈ. ஆஸ்திரேலியா



❖ இந்தியா மற்றும் பிரான்ஸின் ரபேல் போர்விமானங்கள், இராஜஸ்தானின் ஜோத்பூரில் 'SKYROS' என்ற பெயரில் போர் விளையாட்டுகளை மேற்கொள்ளவுள்ளன. அடுத்த ஆண்டு ஜனவரி மூன்றாம் வாரத்தில் இப்பயிற்சி நடத்தப்படவுள்ளது. 2020 ஆகஸ்ட்டில் சேவையில் சேர்க்கப்பட்ட ரபேல் போர்விமானங்கள் ஈடுபடும் இந்திய வான்படையின் முதல் பெரிய போர் விளையாட்டு இதுவாகும்.

## நடப்பு நிகழ்வுகள்

### 1.தர்ம ஸ்வதந்திரியா (மத சுதந்திரம்) மசோதா 2020'க்கு ஒப்புதலளித்துள்ள மாநில அமைச்சரவை எது?

அ. ஆந்திர பிரதேசம்

**ஆ. மத்திய பிரதேசம் ☑**

இ. ஒடிசா

ஈ. ஜார்க்கண்ட்

❖ மத்திய பிரதேச மாநில அமைச்சரவையானது சமீபத்தில் தர்ம ஸ்வதந்திரியா (மத சுதந்திரம்) மசோதா – 2020'க்கு ஒப்புதல் அளித்தது. இந்த அவசரச்சட்டமானது மத மாற்றங்களை நோக்கமாகக்கொண்ட திரு–மணங்களை சட்டத்துக்குப்புறம்பானதாக மாற்றுகிறது.

❖ இந்தப் புதிய மசோதாவின்கீழ், ஒருவர்மீது மத மாற்றத்தை நிர்பந்தித்தால் 1–5 ஆண்டுகள் வரை சிறைத் தண்டனையும், குறைந்தபட்சம் ₹25,000 அபராதமும் விதிக்கப்படும். முன்னதாக, உத்தர பிரதேச மாநில அமைச்சரவையும் இதேபோன்ற ஓர் அவசரச் சட்டத்தை நிறைவேற்றியது.

### 2. 'வணிகம் செய்வதை எளிதாக்கும் சீர்திருத்தங்களை' நிறைவு செய்ததை அடுத்து, கீழ்க்காணும் எந்த மாநிலத்திற்கு ₹2731 கோடி கடன் பெற்றுக்கொள்ள நிதி அமைச்சகம் அனுமதித்துள்ளது?

அ. குஜராத்

ஆ. கேரளா

**இ. இராஜஸ்தான் ☑**

ஈ. ஒடிசா

❖ மத்திய நிதி அமைச்சகத்தின் செலவினங்கள் துறையால் பரிந்துரைக்கப்பட்ட 'வணிகம் செய்வதை எளிதாக்கும் சீர்திருத்தங்களை' நிறைவுசெய்த ஆறாவது மாநிலமாக இராஜஸ்தான் மாறியது. இதன் காரணமாக, திறந்தவெளிச்சந்தைகளில் இருந்து கூடுதலாக ₹2,731 கோடி கடனாகப்பெறுவதற்கு அந்த மாநிலம் தகுதிபெற்றது. ஆந்திர பிரதேசம், கர்நாடகா, மத்திய பிரதேசம், தமிழ்நாடு மற்றும் தெலங்கானா ஆகிய ஐந்து மாநிலங்கள் இந்தச்சீர்திருத்தங்களை ஏற்கனவே நிறைவு செய்துள்ளது குறிப்பிடத்தக்கது.

### 3.நாட்டின் மிகச்சிறந்த மாநகராட்சியாக தேர்வுசெய்யப்பட்டுள்ள மாநகராட்சி எது?

அ. சென்னை

**ஆ. விசாகப்பட்டிணம் ☑**

இ. கொச்சின்

ஈ. மைசூரு

❖ விசாகப்பட்டிணம் பெருநகர மாநகராட்சியானது நாட்டின் மிகச்சிறந்த மாநகராட்சியாக தேர்வுசெய்யப்பட்–டுள்ளது. 2019ஆம் ஆண்டில் தொடங்கப்பபட்ட PMAY–நகர்ப்புறத் திட்டத்தின் ஒருபகுதியாக, மத்திய வீட்டுவசதி & நகர்ப்புற விவகாரங்கள் அமைச்சகம், "சிறந்து விளங்கும்" மாநகராட்சி அமைப்புகளுக்கு

ஆண்டுதோறும் வழங்கிவரும் விருதுகளின்கீழ் இதனை அறிவித்தது. ஆந்திர பிரதேச மாநிலம் சிறப்பாக செயல்படும் மாநிலங்கள் பிரிவில் மூன்றாவது இடத்தைப் பெற்றுள்ளது.

**4. 'பசுமை உந்துவிசை – Green Propulsion' தொழினுட்பத்தை உருவாக்கிவருகிற இந்திய அமைப்பு எது?**

அ. DRDO

**ஆ. ISRO ☑**

இ. BARC

ஈ. OFB



❖ இந்திய விண்வெளி ஆய்வுமையத்தின் தலைவரான K சிவன், ISRO'இன் மனிதர்களை விண்வெளிக்கு அனுப்பும், 'ககன்யான்' திட்டத்திற்காக ISRO 'பசுமை உந்துவிசை'யை உருவாக்கிவருவதாக சமீபத்தில் அறிவித்தார். தற்போது பயன்பாட்டிலுள்ள அனைத்து உந்துவிசை முறைகளும் எதிர்காலத்தில் பசுமை உந்துவிசை முறையை பின்பற்றக்கூடும் என்றும் அவர் கூறினார். மின்னாற்றலில் இயங்கும் வாகன –ங்களில் பயன்படுத்தக்கூடிய லித்தியம் அயன் மின்கலங்களையும் ISRO உருவாக்கியுள்ளது.

**5.கீழ்க்காணும் எந்த இந்திய மாநிலத்தில், தௌபால் பல்நோக்கு திட்டம் தொடங்கப்பட்டுள்ளது?**

அ. அஸ்ஸாம்

**ஆ. மணிப்பூர் ☑**

இ. மேற்கு வங்கம்

ஈ. பீகார்



❖ மத்திய உள்துறை அமைச்சரான அமித் ஷா, சமீபத்தில், மணிப்பூர் மாநிலம் இம்பாலில் உள்ள தௌபால் பல்நோக்கு திட்டத்தை (தௌபால் அணை) காணொலி வாயிலாக திறந்துவைத்தார். இந்தத் திட்டம் முதலில் 2014ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது. 462 கோடி மதிப்பிலான இத்திட்டத்தின்மூலம், 35104 ஹெக்டேர் நிலத்திற்கு பாசன வசதி கிடைக்கும். ஒருங்கிணைந்த கண்காணிப்பு மற்றும் கட்டுப்பாட்டி மையம் உள்ளிட்ட திட்டங்களுக்கும் அமைச்சர் அடிக்கல் நாட்டினார்.

**6.பள்ளி பாடத்திட்டத்தில் சீக்கிய குருக்களின் வரலாற்றை உள்ளடக்குவதாக அறிவித்த மாநிலம் எது?**

**அ. உத்தர பிரதேசம் ☑**

ஆ. மத்திய பிரதேசம்

இ. குஜராத்

ஈ. பஞ்சாப்



❖ சீக்கிய குருக்களின் வரலாறு பள்ளி பாடத்திட்டத்தில் சேர்க்கப்படும் என்று உத்தர பிரதேச மாநில முதல –மைச்சர் யோகி ஆதித்யநாத் அறிவித்துள்ளார். பத்தாவது சீக்கிய குருவான குரு கோபிந்த் சிங் மற்றும் அவரது நான்கு மகன்கள் மற்றும் அவரது தாயின் உயிர்த்தியாகத்தை குறிக்கும், 'சாகிப்ஸாதா திவாஸ்' அனைத்து பள்ளிகளிலும் அனுசரிக்கப்படும் என்றும் அவர் அறிவித்தார்.

**7. MoRTH'இன் அறிவிப்புப்படி, காலாவதியான மோட்டார் வாகன ஆவணங்களின் செல்லுபடியாகும் தேதி எது வரை நீட்டிக்கப்படுகிறது?**

அ. ஜனவரி 31, 2021

**ஆ. மார்ச் 31, 2021 ☑**

இ. ஜூன் 30, 2021

ஈ. ஆகஸ்ட் 31, 2021



❖ COVID-19 பெருங்கொள்ளைநோயின் பரவலைத்தடுப்பதற்காக, ஓட்டுநர் உரிமம், பதிவுச்சான்றிதழ்கள், அனுமதிகள் போன்றவற்றுக்கான காலக்கெடுவை 2021 மார்ச்.31 வரை, மத்திய சாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத்துறை அமைச்சகம் நீட்டித்துள்ளது. இதில் 2020 பிப்.1 முதல் அல்லது 2021 மார்ச் 31 வரை காலாவதியாகும் அனைத்து ஆவணங்களும் அடங்கும். நடுவணரசால் இதுபோன்று நீட்டிப்பு வழங்கப்படுவது இது நான்காவது முறையாகும்.

**8.அண்மைச்செய்திகளில் இடம்பெற்ற, பொம்பெயி என்ற அகழாய்வுத்தளம் அமைந்துள்ள நாடு எது?**

அ. பிரான்ஸ்

**ஆ. இத்தாலி ☑**

இ. ஜெர்மனி

ஈ. கிரேக்கம்



❖ பொ. ஆ 79'இல் எரிமலை வெடிப்பின் காரணமாக புதையுண்ட பொம்பெயி என்ற இடத்தில் ஈராயிரம் ஆண்டு பழமையான உணவு & பானங்கள் கடையை தொல்பொருள் ஆய்வாளர்கள் கண்டுபிடித்துள்ள –னர். டெர்மோபோலியம் (இலத்தீன் மொழியில் சூடான பானங்கள் விற்கும் அங்காடி எனப்பொருள்) என அழைக்கப்படும் கடையில், சுடு உணவைக்கொண்ட சில டெர்ரா கோட்டா ஜாடிகளில் உணவின் தடயங்களையும் அவர்கள் கண்டறிந்துள்ளனர். அது, இத்தாலியில் பே நேபிள்ஸ் கடற்கரைக்கு அருகே உள்ள தொல்பொருள் பூங்காவின் ரெஜியோ வி தளத்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

**9.தமிழ்நாட்டின் 38ஆவது மாவட்டம் எது?**

அ. தென்காசி

ஆ. செங்கல்பட்டு

**இ. மயிலாடுதுறை ☑**

ஈ. கள்ளக்குறிச்சி



❖ டிசம்பர் 28 அன்று தமிழ்நாட்டின் 38ஆவது மாவட்டமாக மயிலாடுதுறை மாவட்டம் உருவானது. நாகை மாவட்டத்திலிருந்து பிரித்து மயிலாடுதுறை வருவாய்கோட்டத்திலிருந்த நான்கு வருவாய் வட்டங்களை உள்ளடக்கி மயிலாடுதுறை புதிய மாவட்டமாக உருவாக்கப்பட்டுள்ளது.

❖ மயிலாடுதுறை மாவட்டத்தின் முதன்மை தொழிலாக விவசாயமும், மீன்பிடி தொழிலும் அமைந்துள்ளது. மாவட்டத்தின் மொத்த பரப்பளவு 1172 ச. கிலோ மீட்டர்கள். மயிலாடுதுறை மாவட்டம் பிரிக்கப்பட்டதைத்

தொடர்ந்து, மயிலாடுதுறை மாவட்டத்தில் சீர்காழி வட்டம் சீர்காழி கோட்டமாக அறிவிக்கப்பட்டுள்ளது. மயிலாடுதுறை மாவட்டத்தில் மயிலாடுதுறை, சீர்காழி, குத்தாலம், தரங்கம்பாடி ஆகிய 4 வட்டங்களும்; மயிலாடுதுறை, சீர்காழி, பூம்புகார் ஆகிய 3 சட்டப்பேரவை தொகுதிகளும்; 5 ஊராட்சி ஒன்றியங்களும்; சீர்காழி, மயிலாடுதுறை ஆகிய 2 நகராட்சிகளும்; 4 பேரூராட்சிகளும் அமைந்துள்ளன.

**10.கடல் தரவு மேலாண்மைக்காக புவி அறிவியல் அமைச்சகத்தால் தொடங்கப்பட்ட பயன்பாட்டின் பெயர் என்ன?**

அ. Digital Ocean ☑

ஆ. Ocean Digital

இ. Ocean Data

ஈ. Data Ocean

❖ புவி அறிவியல் அமைச்சகத்தின்கீழ் ஒரு தன்னாட்சி அமைப்பாக இயங்கிவரும் பெருங்கடல் தகவல் சேவைகளுக்கான இந்திய தேசிய மையம் (INCOIS) கடல் தரவு மேலாண்மைக்கென மின்னணு அடிப்படையிலான பயன்பாட்டை அறிமுகப்படுத்தியுள்ளது. 'டிஜிட்டல் ஓசன்' என்று பெயரிடப்பட்ட இந்தத் தளம், கடல் தரவு மற்றும் முன்னறிவிப்பு சேவைகள் குறித்த தகவல்களைப் பகிர்ந்துகொள்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இந்தத் தளம் ஆராய்ச்சி நிறுவனங்கள், கல்வி சமூகம், கடல்சார் தொழிற் துறைகள் மற்றும் பொதுமக்கள்போன்ற பல்வேறு துறைகளுக்கான தரவினை வழங்குகிறது.